بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *15/05/2026* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

# பணிவு மற்றும் தன்னடக்கத்தின் ஒளியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயரிய நல்லொழுக்கங்களின் மனம் கவரும் குறிப்புகள்

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝١ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝٢ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝٣ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝٤ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ۝٥ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝٦ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝٧

உலகில் ஒரு முழுமையான மனிதர் எவரேனும் பிறந்திருக்கிறார் என்றால், அவர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள்தான் என்பதில் நாம் நம்பிக்கையும் ஈமானும் கொண்டுள்ளோம். அன்னாருக்கு முன்னரும் அன்னாருக்கு நிகரான ஒரு முழுமையான மனிதர் பிறந்ததில்லை; இனி வருங்காலத்திலும் பிறக்கப்போவதில்லை. அல்லாஹ்வின் உரிமைகளை நிறைவேற்றுவதாக இருக்கட்டும், அடியார்களின் உரிமைகளை நிறைவேற்றுவதாக இருக்கட்டும், எல்லா விதமான உயரிய நல்லொழுக்கங்களும் அன்னாரிடத்தில் ஒருங்கே அமைந்துள்ளதை காண முடிகிறது. இத்தகைய உயர்ந்த நல்லொழுக்கங்களில் ஒன்றுதான் பணிவு மற்றும் தன்னடக்கம் ஆகும். இன்று இது தொடர்பாக சில நபிமொழிகளையும், ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சில மேற்கோள்களையும் நான் எடுத்துரைப்பேன்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்**: "நமது நபி (ஸல்) அவர்களை விட உலகில் ஒரு முழுமையான மனிதரின் முன்மாதிரி (வேறெங்கும்) இல்லை; இனி மறுமை நாள் வரை இருக்கப் போவதுமில்லை. பாருங்கள்! அற்புதங்கள் நிகழ்த்தக் கூடிய ஆற்றல் கிடைத்த போதிலும் அன்னாருடைய நிலையோ, தாம் எப்போதும் ஓர் இறை அடியார் என்பதாகவே இருந்தது. எப்போதும்,

اِنَّمَاۤ اَنَا بَشَرٌ مِّثۡلُكُمۡ

(நிச்சயமாக நான் உங்களைப் போன்ற ஒரு மனிதனே) என்றே கூறி வந்தார்கள்."

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்**:

"வீண் பெருமைகளிலிருந்தும், தேவையற்ற ஆணவத்திலிருந்தும் நாம் விலகி இருக்க வேண்டும்; பணிவையும் தன்னடக்கத்தையும் கடைப்பிடிக்க வேண்டும். பாருங்கள்! உண்மையில் அனைவரை விடவும் மேலானவராகவும், கண்ணியத்திற்கு தகுதி வாய்ந்தவராகவும் இருந்த ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பணிவு மற்றும் தன்னடக்கத்திற்கான ஒரு முன்மாதிரி திருக்குர்ஆனில் காணக்கிடைக்கிறது. ஒரு பார்வையற்றவர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்து திருக்குர்ஆனை கற்று வந்தார். ஒரு நாள் மக்காவின் தலைவர்களும் அந்நகரத்தின் செல்வந்தர்களும் அன்னாரிடம் ஒன்று கூடி இருந்தார்கள். அவர்களுடன் அன்னார் பேச்சில் மூழ்கி இருந்தார்கள். அந்தப் பார்வையற்றவர் சிறிது நேரம் காத்திருந்த பிறகு அங்கிருந்து சென்றுவிட்டார். இது ஒரு சாதாரண விஷயம்தான். ஆனால், அல்லாஹ் இது குறித்து (திருக்குர்ஆனில்) ஒரு அத்தியாயத்தை இறக்கினான். ஆகவே, ஹஸ்ரத் நபிகள் நாயகம்

(ஸல்) அவர்கள் அந்த நபரின் வீட்டிற்கே சென்று அவரை அழைத்து வந்து தமது அருளுக்குரிய போர்வையை விரித்து அதில் அவரை அமர வைத்தார்கள். (உண்மையான) விஷயம் என்னவென்றால், யாருடைய உள்ளத்தில் இறைவனின் மகத்துவம் குடிகொண்டுள்ளதோ, அவர்கள் நிச்சயமாகப் பணிவுள்ளவர்களாகவும் தன்னடக்கமுள்ளவர்களாகவும் மாற வேண்டியுள்ளது. ஏனெனில் அவர்கள் இறைவனின் தன்னிறைவுத் தன்மையைக் குறித்து எப்போதும் அஞ்சி நடுங்குபவர்களாகவே இருக்கிறார்கள்."

இது, திருக்குர்ஆனோ அல்லது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களோ எடுத்துரைத்த ஒரு (சாதாரண) நிகழ்வு கிடையாது; மாறாக, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உங்களுக்கு ஓர் அழகிய முன்மாதிரி ஆவார்கள்; அன்னாரை நேசிப்பதாக நீங்கள் வாதம் செய்கிறீர்கள் என்றால், நீங்களும் இத்தகைய பணிவு மற்றும் தன்னடக்கத்தின் உயரிய தரங்களை அடைய முயற்சி செய்ய வேண்டும் என்று நமக்குத் தரப்பட்ட ஒரு படிப்பினையாகும்.

**ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்**: "ஒவ்வொரு மனிதனுக்கும் அவனது தலையோடு இரு சங்கிலிகள் பிணைக்கப்பட்டுள்ளன. ஒரு சங்கிலி வானத்தை நோக்கியும், மற்றொரு சங்கிலி பூமியை நோக்கியும் உள்ளது. ஓர் அடியான் பணிவையும் தாழ்மையையும் மேற்கொள்ளும்போது, வானத்துச் சங்கிலியைத் தன் கையில் வைத்திருக்கும் வானவர் அதனை மேலே உயர்த்துகிறார். அவன் ஆணவம் கொண்டு பெருமை பேசும்போது பூமியின் சங்கிலி அவனை கீழே இழுக்கிறது."

**மற்றோர் அறிவிப்பில் வருகிறது**: "ஓர் அடியார் பணிவைக் கடைப்பிடிக்கும்போது அல்லாஹ் அவரை ஏழாவது வானம் வரை உயர்த்தி விடுகிறான்" என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பணிவின் தரம் எத்தகையதாக இருந்தது என்பதைப்பற்றி ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்**: "ஒருமுறை ஒருவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நோக்கி, எங்களது தலைவரே! தலைவரின் மகனே! எங்களில் சிறந்தவரே! சிறந்தவரின் மகனே! என்று கூறினார். அவரின் பேச்சைக் கேட்ட அன்னார், மக்களே! இறையச்சத்தை உங்கள் மீது கடமையாக்கிக் கொள்ளுங்கள். ஷைத்தான் உங்களை வழிதவறச் செய்ய வேண்டாம். நான் அப்துல்லாஹ்வின் மகன் முஹம்மது; அல்லாஹ்வின் அடியானும் அவனது தூதரும் ஆவேன். அல்லாஹ்வின் மீது ஆணையாக! அல்லாஹ் எனக்கு வழங்கிய அந்தஸ்தை விட அதிகமாக நீங்கள் என்னைப் புகழ்ந்து பேசுவதை நான் விரும்பவில்லை என்று கூறினார்கள்."

அதேபோல், "**எவருடைய செயலும் அவரைச் சொர்க்கத்தில் நுழைக்காது என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்**. அப்போது சஹாபிகள், அல்லாஹ்வின் தூதரே! தங்களையுமா என்று கேட்டனர். அதற்கு அன்னார், ஆம், என்னையும் கூடத்தான்; ஆனால், அல்லாஹ் தனது அருளால் என்னை மறைத்துக் கொண்டாலேயொழிய (எனது செயல்கள் மட்டும் என்னைக் காப்பாற்றாது) என்று பதிலளித்தார்கள்."

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், "**அல்லாஹ்வே! என்னை ஓர் எளியவனாக வாழ வைப்பாயாக; எளியவனாகவே எனக்கு மரணத்தைத் தருவாயாக; மறுமையில் எளியவர்களின் கூட்டத்திலேயே என்னை எழுப்புவாயாக**" என்று துஆ செய்யக்கூடியவர்களாக இருந்தார்கள்.

**ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்**: "புத்திக் கூர்மை சற்றுக் குறைவாக இருந்த ஒரு பெண்மணி வந்து, "முஹம்மதே!(ஸல்) எனக்கு தங்களிடம் ஒரு

வேலை உள்ளது என்று கூறினார். அதற்கு அன்னார், இன்னாரின் தாயே! மதீனாவின் எந்தத் தெருவில் நீ விரும்புகிறாயோ அங்கு என்னை அழைத்துச் செல்; உனது வேலையை முடித்துக் கொடுக்கும் வரை நான் உன்னுடன் இருப்பேன் என்று கூறினார்கள்."

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்ஸாரைச் சந்திக்கச் சென்றால், அவர்களின் குழந்தைகளுக்கு ஸலாம் கூறுவார்கள்; அக்குழந்தைகளின் தலைகளைத் தடவிக் கொடுப்பார்கள்; அவர்களுக்காக துஆ செய்வார்கள்.

ஒருமுறை ஒருவர் அன்னாரிடம் வந்து பேசும்போது அன்னாரின் ஆளுமையைக் கண்டு அவரது தோள்கள் நடுங்கத் தொடங்கின. அப்போது அன்னார் அவரிடம், இயல்பாக இருங்கள்! நான் ஒன்றும் அரசன் அல்ல; காய்ந்த இறைச்சியை உண்டு வாழ்ந்த ஒரு பெண்ணின் மகன்தான் என்று கூறினார்கள்.

**ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்**: "அல்லாஹ் நமது நபி (ஸல்) அவர்களுக்கு எந்த அளவுக்கு மகத்தான வெற்றிகளை வழங்கினானோ, அந்த அளவுக்கு அன்னார் பணிவையும் தாழ்மையையும் அதிகமதிகம் கடைப்பிடித்துக் கொண்டே சென்றார்கள்."

"கிறிஸ்தவர்கள் மர்யமின் மகனை மிகைப்படுத்தி புகழ்ந்ததைப் போல, நீங்கள் என்னைப் புகழ்வதில் மிகைப்படுத்த வேண்டாம்; நான் அல்லாஹ்வின் ஓர் அடியான் மட்டுமே. எனவே, அல்லாஹ்வின் அடியான் என்றும் அவனது தூதர் என்றும் மட்டுமே நீங்கள் கூறுங்கள்" என ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

மேலும், "யாரும் என்னை யூனுஸ் பின் மத்தாவை விடச் சிறந்தவன் என்று சொல்ல வேண்டாம்" என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அன்னார் சிறந்தவராக இருந்தபோதிலும், பணிவின் காரணமாக தமது சிறப்பை வெளிப்படுத்த வேண்டாம் என தடுத்தார்கள்.

"ஒரு நபர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்து, படைப்பினங்களில் சிறந்தவரே! என்று விளித்தார். அதற்கு அன்னார், அவர் இப்ராஹீம் (அலை) ஆவார்கள் என்று பதிலளித்தார்கள்."

நிச்சயமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் படைப்பினங்களில் சிறந்தவராக இருந்தார்கள்; இருக்கிறார்கள். ஆனால், அன்னார் மிகுந்த பணிவின் காரணமாக அந்தப் புகழை ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் பக்கம் திருப்பி விட்டார்கள்.

ஏறத்தாழ அரேபியா முழுவதும் வெற்றி கொள்ளப்பட்டு மக்கா வெற்றி ஆன பிறகு, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒரு லட்சத்தை விடவும் அதிகமான சஹாபிகளுடன் ஹஜ் செய்தார்கள். அந்த நேரத்திலும் அன்னாருடைய தன்னடக்கமும் பணிவும் எவ்வாறிருந்தது என்றால், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஒரு சாதாரணமான ஒட்டகச் சேணத்தின் மீதும், நான்கு திர்ஹம்களுக்குச் சமமான - அல்லது அதைவிடக் குறைந்த மதிப்புள்ள - ஒரு சாதாரண போர்வையைப் போர்த்திய நிலையிலுமே ஹஜ் செய்தார்கள்.

**ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் திருநாமங்களின் சிறப்பை எடுத்துரைக்கும் போது இவ்வாறு கூறுகிறார்கள்**:

"அஹ்மது எனும் பெயர் அழகின் வெளிப்பாடாகும்; அதற்கு நேர்மாறாக முஹம்மது எனும் பெயர் கம்பீரத்தின் வெளிப்பாடாகும். இதற்கான காரணம் என்னவென்றால், முஹம்மது எனும் பெயரில் நேசிக்கப்படுதல் எனும் இரகசியம் பொதிந்துள்ளது; அதேசமயம் அஹ்மது என்ற பெயரில் நேசிக்கும் நிலை

மறைந்துள்ளது. ....முஹம்மது எனும் திருநாமத்தில் மறைந்திருந்த நேசிக்கப்படும் தன்மை சஹாபிகளின் மூலமாக வெளிப்பட்டது. (அன்னாருடைய) கண்ணியத்தைக் குறைக்க முயன்றவர்களையும், தலைக்கனம் பிடித்தவர்களையும் இறைவனால் நேசிக்கப்பட்டவரின் அந்த கம்பீரம் அடக்கி ஒடுக்கியது."

**ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்**: "ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நோயாளிகளை நலம் விசாரிப்பார்கள்; ஜனாஸாக்களில் கலந்து கொள்வார்கள்; கழுதையின் மீதும் பயணம் செய்வார்கள்; அடிமைகளின் (விருந்து) அழைப்பையும் ஏற்றுக்கொள்வார்கள்."

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மக்களின் உணர்வுகளுக்கு எந்த அளவு முக்கியத்துவம் அளித்தார்கள் என்பதற்கு ஹதீஸுகளில் மற்றுமோர் உதாரணம் காணக் கிடைக்கிறது; "அன்னார் தொழுநோய் பாதித்த ஒரு மனிதரின் கையைப் பிடித்து, அவரைத் தம்முடன் உணவுப் பாத்திரத்தில் சேர்த்துக் கொண்டார்கள். அவரிடம், அல்லாஹ்வின் பெயரைக் கூறி அவன் மீது நம்பிக்கை வைத்தும், பாரத்தைச் சுமத்தியும் உண்ணுங்கள் என்று கூறினார்கள்."

ஒரு பயணத்தின் போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஆட்டு இறைச்சியைச் சமைக்குமாறு கட்டளையிட்டார்கள். அப்போது நபித்தோழர்கள் அதனை அறுப்பது, தோலை உரிப்பது மற்றும் சமைப்பது போன்ற வேலைகளைத் தத்தமது பொறுப்பில் ஏற்றுக்கொண்டனர். அப்போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், விறகுகளை சேகரிக்கும் பொறுப்பு என்னுடையது என்று கூறினார்கள். நபித்தோழர்கள், அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்களே! நாங்கள் அந்த வேலைகளைச் செய்யப் போதுமானவர்களாக இருக்கிறோம் என்று கூறினர். அதற்கு அன்னார், நீங்கள் போதுமானவர்கள் என்பதை நான் அறிவேன்; இருப்பினும், உங்களுக்கு மத்தியில் நான் ஒரு தனிச்சிறப்பானவனாக இருப்பதை நான் விரும்பவில்லை. ஏனெனில், ஓர் அடியான் மக்களுக்கு மத்தியில் தன்னைத் தனிச்சிறப்பானவனாகக் காட்டிக் கொள்வதை அல்லாஹ் விரும்புவதில்லை என்று கூறினார்கள்."

**ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்**: "ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் வீட்டு வேலைகளில் குடும்பத்தாருக்கு ஒத்தாசையாக இருப்பார்கள்; தொழுகை நேரம் வந்துவிட்டால் தொழுகைக்காகச் சென்று விடுவார்கள்."

வீட்டு வேலைகளில் ஈடுபட முற்றிலும் மறுத்துவிடும் ஆண்களுக்கு இதில் ஒரு பெரும் வழிகாட்டல் உள்ளது; ஆண்களின் இத்தகைய மறுப்பால்தான் மனைவியருக்குக் குறைகூறும் சூழ்நிலையும் உருவாகிறது.

"**ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது காலணிகளைத் தாமே பழுது பார்ப்பார்கள்; தமது ஆடைகளைத் தாமே தைத்துக் கொள்வார்கள்; உங்களில் ஒருவர் தம் வீட்டில் எவ்வாறு வேலை செய்வாரோ, அவ்வாறே அன்னாரும் வீட்டில் வேலை செய்வார்கள்**" என்று ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் இந்த முன்மாதிரியைக் கண்டு ஸஹாபிகளும் தமது வீடுகளில் மனைவியருக்கு ஒத்தாசையாக இருந்தனர் என்பது இதிலிருந்து தெரிய வருகிறது. எனினும், வீட்டு வேலைகளின் அசல் பொறுப்பு மனைவியருக்கே உரியது என்பதும் இங்கு தெளிவாகக் குறிப்பிடத்தக்கது.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எப்போதும் மற்றவர்களை விடத் தாம் தனிச்சிறப்பாக நடத்தப்படுவதை தடுத்து வந்தார்கள். நபவி பள்ளிவாசல் கட்டுமானப் பணியின் போது செங்கற்களைச் சுமக்கும் வேலையில் அன்னார் மக்களுடன் பங்கெடுத்தார்கள்; அகழ் (ப்போர் சந்தர்ப்பத்தில் அகழ்) தோண்டும்போது மண்ணைச் சுமந்தார்கள்; அந்நேரத்தில் அன்னாருடைய மார்பு முடிகளை மண் மறைத்திருக்கும்

அளவுக்கு அன்னாருடைய நிலை இருந்தது. ஒருமுறை அன்னார் வருவதைக் கண்டு சஹாபிகள் எழுந்து நின்றபோது, பாரசீகர்கள் தங்கள் பெரியவர்களுக்காக எழுந்து நிற்பதைப் போல நீங்கள் செய்யாதீர்கள் என்று தடுத்தார்கள்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்**: “ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தாம் வரும்போது மக்கள் எழுந்து நிற்பதைத் தடுத்தார்கள். இது ஈரானியர்களின் பழக்கம்; நான் ஒன்றும் மன்னன் அல்ல என்று கூறினார்கள்.”

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்**: “என்னைப் பொறுத்தவரை தூய்மையடைவதற்கு இதுவே மிகச் சிறந்த வழிமுறையாகும்; இதைவிடச் சிறந்த வழிமுறை ஒன்று கிடைக்க முடியாது. அது என்னவென்றால், மனிதன் எவ்விதத் தற்பெருமையோ அல்லது ஆணவமோ கொள்ளக்கூடாது. அது கல்வியைக் குறித்ததாக இருந்தாலும் சரி; குடும்பத்தைக் குறித்ததாக இருந்தாலும் சரி அல்லது செல்வத்தைக் குறித்ததாக இருந்தாலும் சரி! .......ஒரு மனிதன் ஓர் உயர் குலத்தைச் சேர்ந்த மனிதனிடம் எவ்வாறு நடந்து கொள்கிறானோ அல்லது நடந்து கொள்ள வேண்டுமோ, அவ்வாறே ஒரு முதிய, ஆதரவற்ற, ஏழை பெண்ணோடும் நல்லொழுக்கத்தோடு நடந்து கொள்ளாதவரை வரையிலும், எல்லா விதமான பெருமையிலிருந்தும் ஆணவத்திலிருந்தும் தலைக்கனத்திலிருந்தும் தன்னைத் தற்காத்துக் கொள்ளாத வரையிலும், அவன் ஒருபோதும் இறைவனின் அரசாட்சியினுள் நுழைய முடியாது.”

அல்லாஹ் நமக்குப் பணிவின் உண்மையை புரிந்து கொள்ளவும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முன்மாதிரியை எப்போதும் நம் முன் வைத்துச் செயல்படவும் நல்வாய்ப்பு வழங்குவானாக. ஆமீன்.

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ
اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ
اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ
وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ ـ

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)